# முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்!


## விடியல் பயிற்சி மையம்
## வேலூர்

செல்: 8122706441, 9487640063

www.vidiyalarni.blogspot.com


### TNPSC VAO தேர்வு - பயிற்சி வினாத்தாள் 11 நாள் 22.10.2017

### கிராம நிர்வாகம்

1. வருவாய் தரக்கூடிய பாசன ஆதாரங்களைப் பாதுகாக்க வழங்கப்பட்ட இனாம்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

   A) கிராம ஊழியம் B) பிரம்ம தாயம்

   C) தசபந்தம் D) காவல் ஊழியம்

2. பசலி ஆண்டு என்பது

   A) ஜனவரி முதல் டிசம்பர் B) ஏப்ரல் முதல் மார்ச்

   C) ஜுன் முதல் மே D) ஜுலை முதல் ஜுன்

3. மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு வட்டத்திற்கு வருவாய் தீர்வாய அலுவலராக இருப்பர்?

   A) 3 ஆண்டுகள் B) 5 ஆண்டுகள் C) 7 ஆண்டுகள் D) 10 ஆண்டுகள்

4. அரசு புறம்போக்கு நிலங்களை மைய அரசுக்கு சந்தை மதிப்பினை வசூலித்துக் கொண்டு நில மாற்றம் செய்ய வழிவகை செய்யும் வருவாய் நிலை ஆணை

   A) நிலையாணை 23 B) நிலையாணை 22

   C) நிலையாணை 21 D) நிலையாணை 24ஏ

5. கிராமப்புறங்களில் நிலமற்ற ஏழைக்குடும்பத்திற்கு வீட்டுமனை ஒப்படை செய்ய ஆண்டு வருமான உச்ச வரம்பு

   A) ரூ.10,000 B) ரூ.20,000 C) ரூ.30,000 D) ரூ.50,000

6. கிராமப்புற ஏழை விவசாயிகளுக்கு நில ஒப்படை செய்ய தடைசெய்யப்பட்ட நிலங்களில் அல்லாதது

   A) மந்தைவெளி B) தீர்வை ஏற்பட்ட தரிசு

   C) மயானம் D) மேய்க்கால்

7. தானமாக பெறப்பட்ட நிலங்களை நிலமில்லாத ஏழை மக்களுக்கு விநியோகம் செய்ய தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு.

   A) 1951 B) 1958 C) 1959 D) 1957


விடியல் வேலூர்

8. புலங்களை பற்றியும் அவைகளில் ஏற்படும் மாறுதல்களை பற்றியும் காண்பிக்கும் நிலையான பதிவேடு.

A) உரிமை மாற்ற பதிவேடு  B) நில பதிவேடு B1

C) 'B' பதிவேடு  D) 'அ' பதிவேடு

9. தமிழ்நாடு இனாம் ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு.

A) 1948  B) 1951  C) 1963  D) 1966

10. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

i) கிராமத்தின் மாதவாரி சாகுபடி கணக்கு-கணக்கு எண் 1

ii) இந்த கணக்கு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் அடுத்த ஆண்டு மார்ச் வரை பராமரிக்க வேண்டும்

iii) இந்த கணக்கை கிராம நிர்வாக அலுவலர் ஒவ்வொரு மாதமும் 25-ம் தேதிக்குள் வருவாய் ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும்.

A) i) சரி ii) iii) தவறு  B) i) ii) சரி iii) தவறு

C) i) iii) சரி ii) தவறு  D) அனைத்தும் சரி

11. கிராமத்தில் நீர் பாய்ச்சப்பட்ட பரப்பின் விவரங்களை காண்பிக்கும் கிராம கணக்கு

A) கணக்கு எண் 2C  B) கணக்கு எண் 2D

C) கணக்கு எண் 2E  D) கணக்கு எண் 2F

12. தமிழ்நாடு வருவாய் வசூல் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

A) 1864  B) 1923  C) 1966  D) 1991

13. வருவாய்த் தீர்வாயம் நடத்த தாமதம் ஏற்பட்டால் எவரின் ஆணை பெற்று ஜூன் மாதத்திற்கு பின்பு நடத்தலாம்?

A) வருவாய்க் கோட்ட அலுவலர்  B) மாவட்ட வருவாய் அலுவலர்

C) மாவட்ட ஆட்சியர்  D) வருவாய் நிர்வாக ஆணையர்

14. குடிமராமத்துச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

A) 1858  B) 1864  C) 1923  D) 1948

15. கீழ்கண்டவற்றுள் டபசல் பயிர்களுள் அல்லாதது?

A) கரும்பு  B) வாழை  C) மஞ்சள்  D) கடலை

16. ஆறு, வாய்க்கால் மற்றும் ஓடைக் கரையில் திறந்த அல்லது மூடிய வாய்க்காலின் மூலம் இணைத்துக் கட்டப்பட்டவை.

A) புறம்போக்கு கிணறுகள்  B) துறவுக் கிணறுகள்

C) இசா ஏரி  D) சிறிய ஏரி

17. ஒரு வருடத்தில் எட்டு முதல் 10 மாதங்கள் வரை சாகுபடிக்கு நீர் கொடுக்கக்கூடிய பாசன ஆதாரம்.

A) முதல் வகுப்பு பாசன ஆதாரம்  B) இரண்டாம் வகுப்பு பாசன ஆதாரம்

C) மூன்றாம் வகுப்பு பாசன ஆதாரம்  D) நான்காம் வகுப்பு பாசன ஆதாரம்

18. அரசுக்கு விரைவாக நிலங்கள் தேவைப்படும்போது நிலத்தை கையகப்படுத்த வகை செய்யும் சட்டப் பிரிவு

A) சட்டப்பிரிவு 17(1) B) சட்டப்பிரிவு 17(2)

C) சட்டப்பிரிவு 37B D) A & B

19. கிராமப் புறங்களில் வீட்டுமனை ஒப்படை செய்யும் அளவு

A) 4 செண்ட் B) 3 செண்ட் C) 1 ½ செண்ட் D) 1 செண்ட்

20. நில ஒப்படை பெற்ற விவசாயி ஒப்படை பெற்ற நிலத்தில் நட வேண்டிய குறைந்தபட்ச மரங்கள்.

A) 25 B) 20 C) 10 D) 5

21. ஒதுக்கு காடுகளுக்கு அருகில் எவ்வளவு தூரத்தில் உள்ள நிலங்களை ஒப்படை செய்யக் கூடாது?

A) 100 m B) 150 m C) 200 m D) 805 m

22. வணிக நோக்கத்திற்காக நில குத்தகை வழங்கும்போது நில மதிப்பில் நிர்ணயிக்கப்படும் ஆண்டு குத்தகை தொகை.

A) 7% B) 14% C) 21% D) 28%

23. கீழ்கண்டவற்றுள் பொருந்தாதது எது?

குத்தகை நிதி அதிகார வரம்பு

A) நில நிர்வாக ஆணையர் - ரூ.2,00,000

B) மாவட்ட ஆட்சியர் - ரூ. 50,000

C) வருவாய் கோட்ட அலுவலர் - ரூ.20,000

D) வட்டாட்சியர் - ரூ.10,000

24. நிலச் சீர்திருத்தச் சட்டம் பிரிவு 78-ன்படி தொடரப்படும் வழக்குகளை முடிவு செய்யும் தீர்ப்பாயம் இயங்கி வரும் இடம்

A) சென்னை B) கோவை

C) தஞ்சாவூர் D) மதுரை

25. நம்பகங்கள் (Trust) தங்களது சொந்த சாகுபடிக்கு வைத்துக் கொள்ள நிர்ணயம் செய்யப்பட்ட நில உச்சவரம்பு

A) 5 தர ஏக்கர் B) 10 தர ஏக்கர் C) 15 தர ஏக்கர் D) 20 தர ஏக்கர்

26. எந்த மாவட்ட விவசாய தொழிலாளர்களுக்கு தனியான விவசாய தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் இயற்றப்பட்டுள்ளது?

A) திருவாரூர், நாகப்பட்டினம் B) திருச்சி, கன்னியாகுமரி

C) கடலூர், விழுப்புரம் D) இராமநாதபுரம், தூத்துக்குடி

27. பொது நம்பகங்கள் கல்வி மற்றும் மருத்துவமனை நோக்கங்களுக்காக நில உச்சவரம்பை விட கூடுதலாக நிலம் வாங்க அரசிடம் அனுமதி பெற வகை செய்யும் சட்டப்பிரிவு

A) சட்டப்பிரிவு 17 (1) B) சட்டப்பிரிவு 17 (2)

C) சட்டப்பிரிவு 37A D) சட்டப்பிரிவு 37 B

28. கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் கனிமங்களை பற்றிய ஆண்டு பதிவேடான கனிமவளப் பதிவேட்டை குறிக்கும் கிராம கணக்கு எண்.

A) கிராம கணக்கு 18
B) கிராம கணக்கு 22
C) கிராம கணக்கு 23
D) கிராம கணக்கு 24

29. தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு

A) 1961
B) 1972
C) 1969
D) 1956

30. வருவாய் நிலை ஆணை எண் 33-ன்படி நில உரிமையை விட்டுக் கொடுக்கும்போது ஆய்வு செய்து பின் அங்கீகாரம் செய்து ஆணையிடுபவர்

A) வருவாய்க் கோட்ட அலுவலர்
B) மாவட்ட வருவாய் அலுவலர்
C) வட்டாட்சியர்
D) மாவட்ட ஆட்சியர்

31. கைப்பற்று நிலத்தையும் மற்ற எல்லா வகையான நிலங்களையும் பிரிவுகளாக, புல எண், உட்பிரிவு வாரியாக அனைத்து விவரங்களையும் காட்டும் அதிமுக்கியமான கிராம கணக்கு.

A) கிராம கணக்கு எண் 1
B) கிராம கணக்கு எண் 1 A
C) கிராம கணக்கு எண் 2
D) கிராம கணக்கு எண் 3

32. தீர்வை விதிக்கப்பட்டிருந்தும் நிலவரித்திட்டத்தின் போது உரிமை கொண்டாடப்படாத நிலங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது?

A) தீர்வை ஏற்படாத தரிசு
B) தீர்வை ஏற்பட்ட தரிசு
C) புறம்போக்கு நிலங்கள்
D) மானாவாரி நிலங்கள்

33. நிலவரி திட்டம் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைமுறைப்படுத்த வேண்டும்?

A) 10
B) 20
C) 30
D) 40

34. நிலவரியானது எந்த மாதத்திலிருந்து நான்கு தவணைகளாக வசூல் செய்ய வேண்டும்?

A) ஜனவரி
B) ஜுலை
C) ஏப்ரல்
D) ஜுன்

35. மழை கணக்கு என்பது

A) கிராம கணக்கு எண் 17
B) கிராம கணக்கு எண் 18
C) கிராம கணக்கு எண் 19
D) கிராம கணக்கு எண் 20

36. கிராமத்தில் பெய்த மழையின் அளவு அந்நாளின் எத்தனை மணி வரை கணக்கிட்டு பதிய வேண்டும்?

A) காலை 6.30 மணி
B) காலை 8.30 மணி
C) காலை 10.30 மணி
D) நண்பகல் 12.30 மணி

37. பட்டாதாரர் அல்லாத மற்றவர்களுக்கு சொந்தமான கால்நடைகள் குறித்த கணக்கு

A) கிராம கணக்கு எண். 21
B) கிராம கணக்கு எண். 22
C) கிராம கணக்கு எண். 23
D) கிராம கணக்கு எண். 24

38. நில எடுப்பு, நில மாற்றம், உட்பிரிவுகள் முதலிய நிலையான மாற்றங்கள் நேரிடும் போது அதற்குண்டான ஆணைக்கு ஏற்ப புலப்படத்தில் மாறுதல் செய்பவர்

A) கிராம நிர்வாக அலுவலர்
B) கிராம உதவியாளர்
C) வருவாய் ஆய்வாளர்
D) நில அளவர்

39. அரசு பாக்கிக்காக நிலமானது ஜப்தி செய்யப்பட்டு, நிலச் சொந்தக்காரரால் மீள ஒப்படை செய்து கொள்ள முடியாத நிலங்கள் எவ்வாறு மாற்றம் செய்யப்படுகிறது?

A) தீர்வை ஏற்படாத தரிசு B) தீர்வை ஏற்பட்ட தரிசு

C) புறம்போக்கு நிலங்கள் D) தடை செய்யப்பட்ட நிலங்கள்

40. கிராமத்தின் அடிப்படைப் புள்ளி விவரங்களைப் பற்றி கூறும் புள்ளி விவரப் பதிவேட்டை எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை புத்தக வடிவில் பராமரிக்க வேண்டும்?

A) 1 B) 5 C) 10 D) 15

41. தமிழ்நாடு ஆக்ரமணச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

A) 1905 B) 1969 C) 1996 D) 1966

42. தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்களை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு ஒப்படை செய்ய வகை செய்யும் வருவாய் நிலை ஆணை எண்.

A) வருவாய் நிலை ஆணை எண். 12 B) வருவாய் நிலை ஆணை எண். 13

C) வருவாய் நிலை ஆணை எண். 14 D) வருவாய் நிலை ஆணை எண். 15

43. ஆரம்ப நிலையிலேயே ஆக்ரமணங்களை தடுக்கும் கடமை யாருடையது?

A) கிராம நிர்வாக அலுவலர் B) வருவாய் ஆய்வாளர்

C) மண்டல துணை வட்டாட்சியர் D) தலைமையிடத்து துணை வட்டாட்சியர்

44. ஒவ்வொரு புல எண்ணிலும், ஆக்ரமணதாரர் பெயர், ஆக்ரமணத் தன்மை பற்றிய விவரங்கள் பதிய வேண்டிய கணக்கு

A) கிராம கணக்கு எண் 4 B) கிராம கணக்கு எண் 3

C) கிராம கணக்கு எண் 2 D) கிராம கணக்கு எண் 1

45. ஆக்ரமணங்களை அகற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளில் தமிழ்நாடு நில ஆக்ரமணத் திருத்தச் சட்டம் 1996-ன்படி தலையிடுவதற்கு உரிமை கொண்ட நீதிமன்றம்.

A) உரிமையியல் நீதிமன்றம் B) குற்றவியல் நீதிமன்றம்

C) மாவட்ட நீதிமன்றம் D) உயர்நீதிமன்றம்

46. குடியானவர்கள் தாம் செலுத்திய நிலவரி மற்றும் இதர பாக்கிகளுக்கான பற்று சீட்டு பற்றிய கணக்கு

A) கிராம கணக்கு எண் 17 B) கிராம கணக்கு எண் 18

C) கிராம கணக்கு எண் 15 D) கிராம கணக்கு எண் 16

47. எல்லா ஜமீன்களும் ஒழிக்கப்பட சட்டம் பிறப்பிக்கப்பட்ட ஆண்டு

A) 1948 B) 1963 C) 1956 D) 1964

48. இனாம்தாரரால் இனாம் நிலங்களுக்காக ஜமீன்தாரருக்கு செலுத்த வேண்டிய தொகை

A) தஸ்டிக் படி B) பேஷ்குஷ் C) ஜோடி D) கிவிட் ரென்ட்

49. முன்னாள் பாளையக்காரர்கள் ஜமீன்தாரர்கள் ஆகியோரது உறவினர், ஊழியர், வாரிசுதாரர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட இனாம்.

A) தேவதாயம் B) தர்மதாயம் C) கிராம ஊழியம் D) சொந்தம்

50. வருவாய்த் துறையில் மக்களின் பிரச்சனைகள், தேவைகளை தீர்த்து வைப்பது தான் வருவாய் தீர்வாயத்தின் (ஜமாபந்தி) நோக்கம் என கூறும் வருவாய் நிலை ஆணை எண்

A) 12 B) 21 C) 22 D) 14

51. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

i) ஒரு போக நஞ்சை நிலமாக பதிவு செய்யப்பட்டு 2-ம் போகத்திற்கும் அரசு பாசனத்திலிருந்து நீர் எடுத்து சாகுபடி செய்யும்போது விதிக்கப்படும் தண்ணீர் தீர்வை பசலி - ஜாஸ்தி

ii) ஆயக்கட்டில் சேர்க்கப்படாத புஞ்சை, மானாவாரி மற்றும் புறம்போக்கு நிலங்கள் அரசு பாசன ஆதாரத்திலிருந்து நீர் உபயோகிக்கும்போது விதிக்கப்படும் தண்ணீர் தீர்வை - தீர்வை ஜாஸ்தி

iii) ஒரு பருவத்திற்கு மேல் பூமியில் அறுவடை செய்யாமல் உள்ள சாகுபடி செய்யப்பட்ட பயிர்-டபசல் பயிர்

iv) ஒரு நஞ்சை நிலமானது ஒரு குறிப்பிட்ட நீர் பாசன ஆதாரத்தில் பதிவு செய்யப்பட்டு வேறொரு நீர் பாசன ஆதாரத்தில் நீர் எடுப்பது - முறையற்ற நீர் பாசனம்.

A) i) ii) iii) சரி iv) தவறு B) i) ii) சரி iii) iv) தவறு

C) i) ii) iv)சரி iii) தவறு D) அனைத்தும் சரி

52. நில எடுப்பின்போது சந்தை மதிப்பு அல்லது வழிகாட்டி மதிப்பு இவற்றில் எது குறைவோ அதில் எத்தனை சதவிதம் ஒப்புக் கொள்ளப்பட்ட விலையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்?

A) 50% B) 100% C) 150% D) 175%

53. வருவாய் நிலை ஆணை 22-ன்படி ஆதிதிராவிட நலத்துறையால் வழங்கப்பட்ட வீட்டு மனையில் எவ்வளவு காலத்திற்குள் வீடு கட்ட வேண்டும்?

A) 3 B) 6 C) 9 D) 12

54. வீட்டுமனை ஒப்படை செய்ய நகர்ப்புறங்களில் குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு

A) 16,000 B) 24,000 C) 30,000 D) 50,000

55. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலம் ஒப்படை செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ள பரப்பளவு வரம்பு

A) புஞ்சை 1 ஏக்கர் (அ) நஞ்சை 0.50 ஏக்கர்

B) புஞ்சை 1.25 ஏக்கர் (அ) நஞ்சை 0.75 ஏக்கர்

C) புஞ்சை 2.5 ஏக்கர் (அ) நஞ்சை 1.25 ஏக்கர்

D) புஞ்சை 3 ஏக்கர் (அ) நஞ்சை 1.50 ஏக்கர்

56. நிலம் ஒப்படை பெற்றவர் எவ்வளவு காலத்திற்கு எக்காரணத்திற்காகவும் விற்கக் கூடாது?

A) 5 ஆண்டுகள் B) 7 ஆண்டுகள்

C) 3 ஆண்டுகள் D) 10 ஆண்டுகள்

57. பட்டாவாரியான நிலவரி திட்டத்தினை காண்பிக்கும் சிட்டா

A) கிராம கணக்கு 10ல் 1 B) கிராம கணக்கு 10ல் 2

C) கிராம கணக்கு 11 D) கிராம கணக்கு 12

58. அப்போது நிலவும் சந்தை மதிப்பின் அடிப்படையில் குத்தகை தொகை எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றி அமைக்க வேண்டும்?

A) 7 B) 5 C) 3 D) 2

59. தங்கள் சொந்த ஏர் உழவு மாடுகளுடன் உழுபவருக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதியம்

A) ரூ. 146 B) ரூ. 150 C) ரூ. 325 D) ரூ. 196

60. சாகுபடி குத்தகைதாரர்கள், நில சொந்தக்காரர்களுக்கு அல்லது அறக்கட்டளைக்கு மொத்த விளைச்சலில் குத்தகை தொகையாக செலுத்த நிர்ணயித்துள்ள அளவு

A) 20% B) 25% C) 30% D) 35%

61. ஐந்து நபர் கொண்ட குடும்பத்திற்கு வழங்கப்பட்டுள்ள நில உச்ச வரம்பு

A) 15 தர ஏக்கர் B) 20 தர ஏக்கர் C) 25 தர ஏக்கர் D) 30 தர ஏக்கர்

62. 'தர்ஜா வாரிப்புள்ளி' எனும் சொல் சம்மந்தமான கணக்கு

A) கிராம கணக்கு எண். 24 B) கிராம கணக்கு எண். 22

C) கிராம கணக்கு எண். 21 D) கிராம கணக்கு எண். 23

63. பிறப்பு இறப்பு பதிவு தொடர்பான கிராம கணக்கு எண்

A) கிராம கணக்கு எண். 16 B) கிராம கணக்கு எண். 17

C) கிராம கணக்கு எண். 18 D) கிராம கணக்கு எண். 19

64. நஞ்சை நிலங்கள் எத்தனை வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன?

A) 2 B) 3 C) 4 D) 5

65. கைப்பற்றுதாரர் யாரேனும் காணாமல் போய்விட்டால் அவர் உண்மையில் உயிருடன் இருக்கிறார் என்பதனை நிருபிக்கப் போதிய சான்று இல்லா நிலையில் எத்தனை ஆண்டுகளுக்கு பிறகு அவர் இறந்ததாக கருத வேண்டும்?

A) 5 B) 6 C) 7 D) 10

66. பசலி வாரியாக ஒவ்வொரு மாத கடைசியிலும் ஒவ்வொரு பட்டாதாரர் செலுத்த வேண்டிய கேட்பு வசூல் பாக்கி பற்றிய கணக்கு

A) கிராம கணக்கு எண். 15 B) கிராம கணக்கு எண். 16

C) கிராம கணக்கு எண். 17 D) கிராம கணக்கு எண். 18

67. கிராமங்களில் தினசரி வசூல்களை காண்பிக்கும் கணக்கு

A) கிராம கணக்கு எண். 15 B) கிராம கணக்கு எண். 14

C) கிராம கணக்கு எண். 13 D) கிராம கணக்கு எண். 12

68. வசூலிக்க இயலாதென கருதப்பட்ட பாக்கி விவரங்களை தெரிவிக்கும் விவரப்படி

A) கிராம கணக்கு எண். 14 B) கிராம கணக்கு எண். 14 A

C) கிராம கணக்கு எண். 14 B D) கிராம கணக்கு எண். 14 C

69. சிறுதொழில் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு நகர்ப்புற நிலவரியிலிருந்து அளிக்கப்பட்ட சலுகை

A) 10% B) 20% C) 25% D) 50%

70. நகர்ப்புற நிலவரியிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ள நிலங்கள்

A) சங்கீத நாடக சபை B) திரையரங்குகள்

C) தொழிற்சாலைகள் D) குடிசை பகுதிகள்

71. 1 மனை (அ) 1 கிரவுண்ட் என்பது

A) 2400 சதுர அடி B) 2400 சதுர மீட்டர்

C) 1200 சதுர அடி D) 1200 சதுர மீட்டர்

72. ஒரு வருவாய் கிராமத்தின் நிலவரி மொத்த கேட்பு எவ்வளவு என்பதை தெரிந்து கொள்ள உதவும் கணக்கு

A) கிராம கணக்கு எண். 11 B) கிராம கணக்கு எண். 12

C) கிராம கணக்கு எண். 13 D) கிராம கணக்கு எண். 14

73. ஜப்தி செய்வதற்கு விலக்கு அளிக்கப்பட்ட பொருட்களுள் அல்லாதது

A) மாங்கல்யம் B) உழவு மாடுகள்

C) கதவுகள், ஜன்னல்கள் D) விவசாய நிலங்கள்

74. அனுமதியின்றி புறம்போக்கு தீர்வை விதிக்கப்பட்ட தரிசு மற்றும் தீர்வை ஏற்படாத தரிசு நிலங்களில் ஆக்கிரமிப்பிற்கு விதிக்கப்படும் தீர்வை பற்றிய கணக்கு.

A) கிராம கணக்கு எண். 5 B) கிராம கணக்கு எண். 6

C) கிராம கணக்கு எண். 7(1) D) கிராம கணக்கு எண். 7(2)

75. தண்ணீர் தீர்வை விதிப்பு பற்றி காட்டும் பதிவேடு

A) கிராம கணக்கு எண். 4 B) கிராம கணக்கு எண். 5

C) கிராம கணக்கு எண். 6 D) கிராம கணக்கு எண். 7(2)

76. பருவ நிலை பாதிப்பு ஏற்படும்போது நிலவரி தள்ளுபடி செய்யப்படுவதைக் காண்பிக்கும் கணக்கு

A) கிராம கணக்கு எண். 5 B) கிராம கணக்கு எண். 4

C) கிராம கணக்கு எண். 6 D) கிராம கணக்கு எண். 7

77. ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் கிராம நிர்வாக அலுவலர் ஒவ்வொரு ஆண்டும் பொது இடங்களில் குறைந்தது எத்தனை மரங்கள் நட வேண்டும்?

A) 25 B) 50 C) 75 D) 100

78. அடங்கல் கணக்கு என்பது

A) கிராம கணக்கு எண். 1 B) கிராம கணக்கு எண். 2

C) கிராம கணக்கு எண். 3 D) கிராம கணக்கு எண். 4

79. வருவாய்த் துறையின் கீழ் அரசு புறம்போக்கில் உள்ள மர விவரங்கள் காட்டும் பதிவேடு

A) கிராம கணக்கு எண். 2C B) கிராம கணக்கு எண். 2D

C) கிராம கணக்கு எண். 2 E D) கிராம கணக்கு எண். 2 F

80. புலங்களின் பதிவுகளின் மாறுதல்களை காண்பிக்கும் வருடாந்திர பதிவேடு.

A) கிராம கணக்கு எண். 1 B) கிராம கணக்கு எண். 2

C) கிராம கணக்கு எண். 3 D) கிராம கணக்கு எண். 4

81. சாதாரண கிராம வரிவசூல் மற்றும் கிராம காவல் வேலைகளுக்காக வழங்கப்பட்ட இனாம்கள்

A) தர்ம தாயம் B) தச பந்தம்

C) காவல் ஊழியம் D) கிராம ஊழியம்

82. பொது நோக்கங்களுக்காகவும், சமுதாய நலனை முன்னேற்றுவதற்காகவும் அரசு நிலங்களை உரிமை மாற்றம் செய்ய வகை செய்யும் வருவாய் நிலை ஆணை

A) 21 B) 22 C) 23 D) 24

83. ஒரு அரசு நிலத்தை அதிகபட்சமாக எத்தனை ஆண்டுகளுக்கு குத்தகை விடலாம்?

A) 10 B) 20 C) 30 D) 40

84. பூமிதான வாரியம் எந்த ஆண்டு முதல் நிலச்சீர்த்திருத்த துறைக்கு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது?

A) 2005 B) 2006

C) 2007 D) 2008

85. தமிழ்நாட்டில் பூமி தானமாக பெறப்பட்டுள்ள நிலங்கள்

A) 28060 ஏக்கர் B) 26080 ஏக்கர்

C) 82060 ஏக்கர் D) 68020 ஏக்கர்

86. பூமிதான இயக்கம் ஆச்சர்ய வினோபா பாவே வால் தொடங்கப்பட்ட ஆண்டு

A) 1959 B) 1958

C) 1956 D) 1951

87. குறைந்தபட்ச ஊதியங்கள் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

A) 1948 B) 1956

C) 1963 D) 1961

88. கிராமத்தின் மாதவாரி சாகுபடி கணக்கு

A) கிராம கணக்கு எண். 3 B) கிராம கணக்கு எண். 1

C) கிராம கணக்கு எண். 5 D) கிராம கணக்கு எண். 7

89. 'வஜா' கணக்கு என அழைக்கப்படுவது

A) கிராம கணக்கு எண். 1 B) கிராம கணக்கு எண். 3

C) கிராம கணக்கு எண். 5 D) கிராம கணக்கு எண். 7

90. பட்டா வாரியாக கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு விதிக்கப்பட வேண்டிய பல்வேறு வகை தீர்வை இனங்களின் விவரத்தை காட்டும் பதிவேடு

A) கிராம கணக்கு எண். 10ல் 1 B) கிராம கணக்கு எண். 10ல் 2

C) கிராம கணக்கு எண். 11 D) கிராம கணக்கு எண். 12

91. அரசு பாக்கிக்காக ஜப்தி செய்யப்பட்ட நிலத்தை நிலச் சொந்தக்காரர் எத்தனை ஆண்டுகளுக்குள் மீட்டுக் கொள்ளலாம்?

A) 4 ஆண்டுகள் B) 6 ஆண்டுகள்

C) 8 ஆண்டுகள் D) 12 ஆண்டுகள்

92. தமிழ்நாடு நில அளவை (ம) எல்லைகள் குறித்த சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

A) 1913 B) 1923 C) 1933 D) 1943

93. நிலவரியானது பிரதி மாதம் எந்த தேதிக்குள் செலுத்தாவிட்டால் நிலுவையாக கருத வேண்டும்?

A) 5ம் தேதி B) 10ம் தேதி

C) 15ம் தேதி D) 20ம் தேதி

94. பட்டாதாரர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட தொகைகள் வங்கியில் செலுத்துவதற்கு பராமரிக்கப்படும் சுருக்கமான பட்டியல்

A) கிராம கணக்கு எண். 12 B) கிராம கணக்கு எண். 13

C) கிராம கணக்கு எண். 14 D) கிராம கணக்கு எண். 15

95. தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

A) 1951 B) 1948 C) 1963 D) 1972

96. வருவாய்த்துறை என்பது எந்த நாள் முதல் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது?

A) 27-05-2003 B) 20-10-2010

C) 07-07-2009 D) 30-01-2010

97. அனைத்து அரசிறைக் கழிவுகளைக் காண்பிக்கும் கணக்கு

A) கிராம கணக்கு எண். 1 B) கிராம கணக்கு எண். 2

C) கிராம கணக்கு எண். 3 D) கிராம கணக்கு எண். 4

98. கால்நடைப் பதிவேடு கணக்கு எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை பராமரிக்க வேண்டும்?

A) 1 B) 3 C) 5 D) 7

99. மூன்று மாதங்களுக்கு குறைவாக நீர் வழங்கக் கூடிய பாசன ஆதாரங்கள்

A) 2ம் வகுப்பு பாசன ஆதாரம் B) 3ம் வகுப்பு பாசன ஆதாரம்

C) 4ம் வகுப்பு பாசன ஆதாரம் D) 5ம் வகுப்பு பாசன ஆதாரம்

100. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு

A) 1966 B) 1991 C) 1981 D) 1963

வாழ்த்துகள்!

# ANSWER KEYS

| Q.No. | Answer | Q.No. | Answer | Q.No. | Answer | Q.No. | Answer |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 26 | A | 51 | D | 76 | A |
| 2 | D | 27 | C | 52 | C | 77 | B |
| 3 | B | 28 | D | 53 | B | 78 | B |
| 4 | A | 29 | A | 54 | D | 79 | A |
| 5 | C | 30 | D | 55 | A | 80 | C |
| 6 | B | 31 | C | 56 | D | 81 | D |
| 7 | B | 32 | B | 57 | A | 82 | D |
| 8 | D | 33 | C | 58 | C | 83 | C |
| 9 | C | 34 | A | 59 | C | 84 | B |
| 10 | D | 35 | D | 60 | B | 85 | A |
| 11 | B | 36 | B | 61 | A | 86 | D |
| 12 | A | 37 | A | 62 | D | 87 | A |
| 13 | D | 38 | D | 63 | D | 88 | B |
| 14 | A | 39 | B | 64 | B | 89 | C |
| 15 | D | 40 | C | 65 | C | 90 | B |
| 16 | B | 41 | A | 66 | B | 91 | D |
| 17 | B | 42 | D | 67 | C | 92 | B |
| 18 | D | 43 | A | 68 | C | 93 | B |
| 19 | B | 44 | C | 69 | C | 94 | D |
| 20 | C | 45 | D | 70 | D | 95 | A |
| 21 | C | 46 | B | 71 | A | 96 | A |
| 22 | B | 47 | A | 72 | B | 97 | D |
| 23 | D | 48 | C | 73 | D | 98 | C |
| 24 | A | 49 | D | 74 | C | 99 | D |
| 25 | D | 50 | A | 75 | C | 100 | B |